# சிலுவையின் மீது மரணத்திற்கு வழிநடத்திய படிகள்

## (26:1–16)

*21:23 - 25:46 வரையிலான நிகழ்வுகள் யாவும் பாடுகளின் வாரத்தில் செவ்வாய்க்கிழமையன்று நடந்திருக்கப் பெரிதும் வாய்ப்புள்ளது. இயேசு தேவாலயத்தில் போதித்திருந்தார் மற்றும் அவரை விமர்சித்தவர்கள் அவரை எதிர்கொண்டபோது, அவர்களுக்குப் பதில் அளித்திருந்தார் (21:23-22:46). பரிசேயர்களின் மாய்மாலத்தைப் பற்றி மக்கள் கூட்டத்தை அவர் எச்சரித்தார் (23:1-39). தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டபோது அவர், ஒலிவ மலைக்குத் தமது சீஷர்களுடன் சென்றார். இந்தத் தனிப்பட்ட காட்சி அமைவில் அவர், எருசலேமின் அழிவைப் பற்றியும் வானங்களில் தமது மறுவருகையைப் பற்றியும் அவர்களுக்குப் போதித்தார் (24:1-25:46). ஒலிவ மலை உரையாடலின் முடிவானது இயேசுவின் வெளிப்படையான போதனையினுடைய முடிவைக் குறித்தது. ஒரு விதிவிலக்கு[1] தவிர, 26ம் அதிகாரத்தின் நிகழ்வுகள் யாவும், பாடுகளின் வாரத்தின் புதன்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமையில் நடைபெற்றன என்பது உறுதி. இயேசுவைக் கொலை செய்வதற்கு யூதத்தலைவர்கள் சூழ்ச்சி செய்தது அநேகமாக புதன்கிழமையன்று நடைபெற்றிருக்கலாம் (26:1-5), இதில் கர்த்தரை அவர்கள் கரங்களில் காட்டிக்கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொண்டதும் அடங்கும் (26:14-16).*

*இந்த அதிகாரத்துடன் நாம், கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை எடுத்துரைக்கும் மத்தேயு சுவிசேஷத்தின் கடைசிப் பகுதிக்குள் நுழைகிறோம் (அதிகாரங்கள் 26-28). இந்த நிகழ்ச்சிகளில் சுவிசேஷத்தின் உச்சகட்டம் வருகிறது; இது இயேசு, "தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (1:21) என்பது எவ்வாறு ஆகும் என்று நமக்குக் கூறுகிறது. வசனப்பகுதியானது, சிலுவையின் மீதான இயேசுவின் மரணம் தேவனுடைய இராஜரீக சித்தத்தின்படி நடைபெற்றது, சரியான வேளையில் இயேசு மரணத்திற்குத் தம்மைத் தாழ்த்திக் கீழ்ப்படிந்தார், உலகத்தின் பாவங்களுக்காகத் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுக்கும் மேடையான சிலுவைக்குத் திரும்பினார் என்பதை வலியுறுத்துகிறது (26:2, 18, 54, 56). தேவனுடைய நித்திய நோக்கத்தின் கண்ணோட்டத்தில், இந்த எடுத்துரைப்பு, துன்பம் அல்லது தோல்வியைப் பற்றியதல்ல, ஆனால் இந்த வரலாற்றின் வரியானது இயேசுவின் வெற்றிகரமான உயிர்த்தெழுதலுக்குத் திரும்பும் முன்னரேகூட, நிறைவேற்றம் மற்றும் வெற்றியைப் பற்றியதாக உள்ளது.[2]*

# *#1: இயேசுவைக் கொல்ல சூழ்ச்சி (26:1-5)*

***[1]இயேசு இந்த வசனங்களையெல்லாம் சொல்லி முடித்தபின்பு, அவர் தம்முடைய சீஷரை நோக்கி:***

***[2]இரண்டுநாளைக்குப்பின்பு பஸ்கா பண்டிகை வருமென்று அறிவீர்கள்; அப்பெழுது, மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார்.***

***[3]அப்பொழுது, பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஜனத்தின் மூப்பரும், காய்பா என்னப்பட்ட பிரதான ஆசாரியனுடைய அரமனையிலே கூடிவந்து,***

***[4]இயேசுவைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும்படி ஆலோசனைபண்ணினார்கள்.***

***[5]ஆகிலும் ஜனங்களுக்குள்ளே கலகமுண்டாகாதபடிக்குப் பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது என்றார்கள்.***

***வசனம் 1. இயேசு இந்த வசனங்களையெல்லாம் சொல்லி முடித்தபின்பு*** *என்பது, இயேசுவின் போதனைக் கட்டங்களை முடிக்க மத்தேயு சுவிசேஷத்தில் திரும்பத் திரும்ப உரைக்கப்பட்ட சொல்விளக்கமாகும் (7:28; 11:1; 13:53; 19:1). இவ்விஷயத்தில், வேதபாரர்களுக்கும் பரிசேயர்களுக்குப் சாபம் (அதிகாரம் 23) மற்றும் ஒலிவ மலைக் கலந்துரையாடல் (அதிகாரங்கள் 24; 25) ஆகியவை, போதனையின் ஒரு கட்டமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.* ***எல்லாம்*** *என்ற பெயர் உரிச்சொல்லின் பயன்பாடு அநேகமாக 23 முதல் 25 வரையிலுள்ள அதிகாரங்களில் இயேசு கூறிய யாவற்றையும் குறிப்பிடலாம். இது இயேசு தமது உபதேச ஊழியத்தை முடிந்திருந்தார் என்ற உணர்ந்தறிதலையும் சுட்டிக்காண்பிக்கலாம்.*

***வசனம் 2.*** *இயேசு - தமது உபதேசத்தை முடித்த நிலையில், - நான்காவது (மற்றும் கடைசி) முறையாக வரவிருந்த தமது மரணத்தைப் பற்றித் தமது அப்போஸ்தலர்களுக்குத் தகவல் தெரிவித்தார் (காண்க 16:21; 17:22, 23; 20:17-19).* ***இரண்டுநாளைக்குப் பின்பு பஸ்கா பண்டிகை*** *வரவிருந்த இரவில், அவர்* ***சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்.*** *யூதத்தலைவர்கள் இயேசுவின் உயிரை வாங்கச் சூழ்ச்சி செய்து கொண்டிருந்ததை இயேசு அறிந்திருந்தார், மற்றும் மீட்பிற்கான பிதாவின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான தமது வேளை வந்திருந்தது என்பதையும் அவர் உணர்ந்தறிந்தார் (26:18).*

***வசனம் 3.*** *வரவிருந்த இயேசுவின் மரணத்தைப் பற்றி அவர் தமது அப்போஸ்தலர்களுக்குத் தகவல் தெரிவித்துக் கொண்டிருக்கையில், யூதத்தலைவர்கள், மிகக்குறைவான கலகத்துடன் அவரைப் பிடிப்பது எவ்வாறு என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.* ***காய்பாவின்*** *அரண்மனையில் அவர்களின் கூட்டம், அரண்மனைக் கட்டிடங்கள் சூழ்ந்திருந்த* ***முற்றத்தில்*** *(aulē) நடைபெற்றிருக்கலாம். இருப்பினும் இந்த aulē என்பது சிலவேளைகளில், "அரண்மனை" என்பதற்கு விரிவாக்கமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[3] பெரும்பான்மையான ஆங்கில மொழிபெயர்ப்புகள் பிந்திய கண்ணோக்கையே ஆதரிக்கின்றன.*

*இது சனதெரீன் சங்கத்தின் அலுவலக ரீதியான கூட்டமாக இராமல்,*

ஒரு முறைசாராக் கூட்டமாகவே இருந்தது. **பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும்** பட்டியலிடப் பட்டிருக்கையில், இந்த சங்கத்தில் இருந்த வேதபாரகர் என்ற மூன்றாவது குழுவினர் இங்கு குறிப்பிடப்படவில்லை (16:21ன் மீதான விளக்கங்களைக் காணவும்). லியோன் மோரீஸ் அவர்கள், வேதபாரகரும் பரிசேயரும் அங்கில்லை என்பது, இயேசு "யூத நிர்வாகத்தின் உயர்குடி மக்களால், அரசியல் உண்மை நிலையில் ஆர்வம் கொண்டு அதை ரோமப் பிரபுக்களுடன் பொருந்தச் செய்த மக்களால் மிகவும் பலமாக எதிர்க்கப்பட்டார்" என்று குறிப்பிட்டார்.[4]

**பிரதான ஆசாரியரின்** அலுவலகமானது. தோற்றகாலத்தில் ஆரோனின் மூத்த ஆண் சந்ததிக்கு மாத்திரமே தரப்பட்டது, ஆனால் கிறிஸ்துவின் காலத்தில் இந்த அலுவலகம், ஆசாரியர்களில் மிக உயர்ந்த தொகை தருபவர்களுக்குக் கிடைத்தது.[5] கி.மு. 37 முதல் கி.பி. 67 வரை, குறைந்தபட்சம் இருபத்தி எட்டு மனிதர்கள் இந்த அலுவலில் ஊழியம் செய்திருந்தனர்.[6] அன்னா என்பவர், சீரியாவின் ஆளுநரான க்யூரினியஸ் (சிரேனியு) என்பவரால் நியமிக்கப்பட்டார்,[7] மற்றும் அவர் இந்தப்பகுதியில் கி.பி. 6 முதல் 15 வரையில் இருந்தார். அவர், பொந்தியு பிலாத்துவுக்கு முன் இருந்த ரோமப்பிரதிநிதியான வலேரியஸ் கிரேட்டஸ் என்பவரால் பதவியிறக்கப்பட்டார். முதல் நூற்றாண்டின் பல் வேறு காலகட்டங்களில், அன்னாவின் ஐந்து மகன்களான, எலெயேசர், யோனத்தான், தியோபிலஸ், மத்தியா மற்றும் அனானுஸ் ஆகியோரும்கூட இந்தப் பதவியைக் கைப்பற்றி இருந்தனர். அன்னா தமது நீண்ட வாழ்நாளின் எஞ்சிய காலகட்டம் முழுவதிலும், உரிமைவாய்ந்த பிரதான ஆசாரியராக யூதர்களால் கனப்படுத்தப்பட்டார்.[8]

கி.பி. 18ல் வலேரியஸ் கிரேட்டஸ் என்பவரால், அன்னாவின் மருமகனான காய்பா (யோவான் 18:13) பிரதான ஆசாரியராக நியமிக்கப்பட்டார். அந்தப் பதவியில் அவர் கி.பி. 36 வரையிலும் இருந்தார், அதன்பின்பு அவர், பொந்தியு பிலாத்துவுக்குப் பின்வந்த விட்டேலியஸ் என்பவரால் நீக்கப்பட்டார்.[9] அவரது பதவிக்காலம் இதற்கு முன் இருந்திராத அளவுக்கு நீண்டதாக இருந்தது. ரோமர்களால் அலுவலகரீதியான பிரதான ஆசாரியராக காய்பா அங்கீகரிக்கப்பட்டிருக்கையில், அன்னாவின் அதிகாரம் யூத மக்களால் பரவலாக மதிக்கப்பட்டிருந்தது (லூக்கா 3:2; நடபடிகள் 4:6).

1990ல் கட்டுமானப் பணியாளர்கள், எருசலேமில் பழங்காலப் புதைக்கும் குகை ஒன்றைத் தோண்டி எடுத்தனர், அதில் பல சமாதிப்பெட்டிகள் (அல்லது எலும்புப் பெட்டிகள்) அடங்கி இருந்தன. அவற்றில் மிகப்பெரிய ஒன்றில் "காய்பாவின் மகன் யோசேப்பு" என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அதில் ஏறக்குறைய அறுபது வயதில் மரித்த ஒரு மனிதரின் எலும்புகள் உட்பட, ஆறு வெவ்வேறு மக்களின் எலும்புகள் அடங்கியிருந்தன. யோசிப்பஸ் அவர்கள், பிரதான ஆசாரியரை "யோசேப்பு காய்பா" என்று குறிப்பிட்டதால்,[10] அந்த சமாதிப்பெட்டியும் எச்சங்களும் அவருடையவை என்று சிலரால் நினைக்கப்பட்டன.[11]

**வசனம் 4.** பிதான ஆசாரியர்களும் மூப்பர்களும் காய்பாவின் அரண்மனையில் கூடிவந்த வேளையில், **இயேசுவைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும்படி ஆலோசனைபண்ணினார்கள்.** இயேசுவைக் கொலை செய்ய வேண்டும் என்ற அவர்களின் முடிவு இந்த வேளையில் தோன்றவில்லை;

*அது நீண்ட நாட்களுக்கு முன்பே தீர்மானிக்கப்பட்டிருந்தது (12:14; 21:38, 45, 46; யோவான் 5:18; 7:1, 19, 25; 8:37, 40; 11:53). அவர்கள் அவரைக் கைது செய்தலும் அவரது மரணமும் எவ்வாறு நிறைவேற்றப் படவேண்டும் என்பதை முடிவு செய்திருந்தனர். "தந்திரமாய்" (dolos) என்ற சொற்றொடர் பெரும்பாலும், "வஞ்சகம்" அல்லது "சூழ்ச்சி" என்று அர்த்தப்படுகிறது. NIV வேதாகமம் இதை, "தந்திரமான ஒரு வழியில்" என்று மொழிபெயர்க்கிறது, அதே வேளையில் NKJV வேதாகமத்தில் "சூழ்ச்சி" என்றுள்ளது. இயேசு கைதுசெய்யப்படுதல் நிறைவாக, அவரது சொந்த அப்போஸ்தலர்களில் ஒருவரான யூதாஸ் காட்டிக்கொடுத்தல் மூலம் நிறைவேற்றப்பட்டது (26:14-16, 47-56).*

***வசனம் 5.*** *ஜனங்களுக்குள்* ***கலகம்*** *ஏற்படாமல் வெளிப்படையாக அவரைப் பிடிக்க இயலாது என்பதை யூதத்தலைவர்கள் அறிந்திருந்தனர், எனவே அவர்கள் அதை இரகசியமாகச் செய்யச் சூழ்ச்சி செய்தனர்.* ***பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது*** *என்ற சொற்றொடர், "பஸ்கா பண்டிகையின் மக்கள் கூட்டத்தின் முன்னிலையில் அப்படிச் செய்யலாகாது" என்று அர்த்தப்படுவதாகக் கருத்துத்தெரிவிக்கப்பட்டுள்ளது[12] (காண்க லூக்கா 22:6). இயேசுவைக் கைது செய்வதற்குப் பண்டிகை முடியும் வரையில் யூதத்தலைவர்கள் காத்திருந்தால், அவர்கள் தங்கள் வாய்ப்பை இழந்து போயிருக்கலாம், அவர்களின் பிடிக்குத் தப்பி, அவர் கலிலேயாவுக்குத் திரும்பியிருப்பார்.*

*பஸ்கா பண்டிகையின் வேளையில், யூதர்கள் தங்கள் தேசீய விருப்ப உணர்வுகளுடன் மேசியாத்துவ எதிர்பார்ப்புகள் உயர்ந்து பாய்ந்தோடும் நிலையில் ஒன்று கூடினர். இந்தப் பண்டிகை, மோசேயின் காலத்தில் எகிப்திய அடிமைத்தளையில் இருந்து இஸ்ரவேல் மக்கள் விடுதலையானதை நினைவுகூர்ந்தது. முதல் நூற்றாண்டில் பல யூதர்கள், ரோம அடக்குமுறை மற்றும் ஆட்சியில் இருந்து தங்களை விடுவிக்க மேசியாவை எதிர்நோக்கியிருந்தனர். அவர்கள் தங்கள் நாட்டின் சுதந்தரத்தைத் திரும்பப் பெறவும் தங்களை ஆள தாவீதைப் போல் ஒரு அரசரைக் கொண்டிருக்கவும் விரும்பினர். இந்த யூதர்களில் ஒருசிலர், தங்களை இயேசு வெற்றிக்கு வழிநடத்த வேண்டும் என்று எதிர்பார்த்தனர், இது வெற்றிப்பிரவேசத்தில் அவர்களின் சத்தமிடுதல்களில் சாட்சியமாக வெளிப்பட்டது (21:9ன் மீதான விளக்கங்களைக் காணவும்). யூதத் தலைவர்கள் இந்தப் பஸ்காப்பண்டிகையின் மக்கள் கூட்டத்தின் நடுவில் ஒரு கலகம் உண்டாவதைத் தவிர்க்க வேண்டியிருந்தது.*

## *#2: இயேசு அபிஷேகம் செய்யப்படுதல் (26:6-13)*

***6இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் இருக்கையில்,***

***7ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமளதைலமுள்ள வெள்ளைக்கல்பரணியைக் கொண்டுவந்து, அவர் போஜனபந்தியிலிருக்கும்போது, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.***

***8அவருடைய சீஷர்கள் அதைக் கண்டு விசனமடைந்து: இந்த வீண்செலவு***

***என்னத்திற்கு?***

***[9]இந்தத் தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள்.***

***[10]இயேசு அதை அறிந்து, அவர்களை நோக்கி: நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன் தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்.***

***[11]தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்.***

***[12]அவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது.***

***[13]இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.***

***வசனம் 6.*** *மத்தேயு சுவிசேஷம் இயேசுவின் நாட்களை எப்போதுமே வரிசை முறையில் எடுத்துரைப்பதில்லை. இங்கு இது ஒரு சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்வுகளை விளக்கப் பின்திரும்புகிறது.* ***இயேசு பெத்தானியாவுக்கு*** *வந்திருந்தார் (21:17ன் மீதான விளக்கங்களைக் காணவும்). அவர் "பஸ்காவுக்கு ஆறு நாட்களுக்கு முன் அங்கு வந்திருந்தார்" மற்றும் "அங்கே அவர்கள் அவருக்கு இராவிருந்து செய்தனர்" (யோவான் 12:1, 2; காண்க 26:2). இந்த உணவு சனிக்கிழமை மாலை வேளையில் நடைபெற்றிருக்கலாம் (இது யூதர்களின் நாள் கணக்கின்படி ஏற்கனவே ஞாயிற்றுக் கிழமையாக இருந்தது) மற்றும் இது தொடர்ந்து வந்த அடுத்த நாளில் வெற்றிப்பிரவேசத்திற்கு முன்னர் நடந்திருக்கலாம் (21:1ன் மீதான விளக்கங்களைக் காணவும்).*

*இந்த இரவு விருந்தில் குறைந்த பட்சம் பதினேழு பேர் கலந்து கொண்டனர். இயேசு தமது பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுடனும், லாசரு மற்றும் மரியாள் மார்த்தாள் என்ற அவரது சகோதரிகளுடனும் அங்கிருந்தார். விருந்து கொடுத்தவரான* ***தொழுநோயாளியாயிருந்த சீமோன்*** *என்பவரும் அங்கிருந்தார். அவர் தமது தொழுநோயில் இருந்து இயேசுவால் குணமாக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் தொழுநோயாளிகள் செய்யும்படி நியாயப்பிரமாணம் கூறியவண்ணம் (லேவியாரகமம் 13:45, 46), அவர் சமூகத்தில் இருந்து தனித்து வாழ்ந்திருப்பார். அவர் தமது குணமாகுதலை மதித்து இந்த இரவு விருந்தைக் கொடுத்திருக்கலாம். அவர் இயேசுவின் மூன்று நண்பர்களுடைய தந்தை என்று யூகிக்கப்படுகிறது,[13] மற்றும் அவர், இலாசரு உயிர்ப்பிக்கப்பட்டது பற்றித் தமது மட்டுமீறிய நன்றியுணர்வையும் வெளிப்படுத்தினார்.*

***வசனம் 7.*** *மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷங்கள் அந்தப்* ***பெண்ணை*** *அடையாளப் படுத்தாமல் இருக்கையில், யோவான் 12:3ம் வசனம், அந்தப்* ***பெண்*** *இலாசருவின் சகோதரியான மரியாள் என்று சுட்டிக்காண்பிக்கிறது. மரியாள்* ***விலையேறப்பெற்ற பரிமளதைலமுள்ள வெள்ளைக்கல்பரணியுடன்*** *இயேசுவை அணுகினாள். "வெள்ளைக்கல்பரணி" (alabastros) என்பது நீண்ட கழுத்துடைய ஒரு "புட்டியை"* (NKJV) *போலிருந்தது. இந்தப் புட்டி கல்லில் நேர்த்தியாக செதுக்கப்பட்டு "களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல்" (யோவான் 12:3;* NIV*)* ***கொண்டிருந்தது, இந்தத்***

*தைலம் இந்தியாவில் விளையும் நளதம் என்ற செடியின் வேர்களில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.*[14] *இது "முந்நூறு பணத்துக்கு அதிகமான கிரயத்துக்கு" விற்கப்பட்டது என்று மாற்கு 14:5ம் வசனம் கூறுகிறது. இந்தப் பணம் ஒரு முழு ஆண்டிற்கு வேலையாள் ஒருவரின் கூலிக்குச் சமமாக இருந்திருக்கும் (18:28; 20:2; 22:19 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்).*

*அவள், அந்தப் புட்டியின் கழுத்துப் பகுதியை உடைத்த பின்பு (மாற்கு 14:3),* ***அவர் போஜனபந்தியிலிருக்கும்போது, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.*** *"ஊற்றினாள்" என்பதற்கான (katacheō) கிரேக்க வார்த்தை, "கீழே ஊற்றுதல்" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. மரியாள் அவரது தலையையும் பாதத்தையும் அபிஷேகம் செய்திருக்க வேண்டும், ஏனெனில் யோவானின் பதிவேடு, அவள் "அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்" மற்றும் "அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது" என்று கூறுகிறது (யோவான் 12:3). யூதர்களின் விருந்துகளில் விருந்தினரை எண்ணெயினால் அபிஷேகம் செய்வது வழக்கமான ஒன்றாக இருந்தது (சங்கீதம் 23:5; லூக்கா 7:46).*

*இவ்வரலாறு, பாவம் நிறைந்த பெயர் அறியப்படாத ஒரு பெண் இயேசுவின் பாதங்களில் அபிஷேகம் செய்து அவற்றைத் தனது தலைமுடியால் துடைத்த நிகழ்வு காணப்படும் லூக்கா 7:36-50 வசனப்பகுதியுடன் குழப்பப்படக் கூடாது. அந்த அபிஷேகம் பெத்தானியாவில் மரியாள் செய்த இந்த அபிஷேகத்திற்கு மிகவும் முன்னதாக நடைபெற்றது. லூக்கா சுவிசேஷத்தில் கூறப்படும் அந்த நிகழ்வு, பரிசேயரான சீமோன் என்பவரின் வீட்டில் நடைபெற்றது (லூக்கா 7:36). "சீமோன்" என்பது அந்தக் காலத்தில் ஒரு பொதுவான பெயராக இருந்தது. வேதவசனங்களில், குறைந்த பட்சம் பத்துப்பேர் அந்தப் பெயரைக் கொண்டு அழைக்கப்பட்டுள்ளனர். மற்றும் இருபது மற்ற சீமோன்கள் யோசிப்பஸ் அவர்களால் குறிப்பிடப்பட்டனர்.*[15] *அந்த வேளையில் இயேசு தம்மை, பாவம் நிறைந்த பெண் தொட அனுமதித்தமைக்காக விமர்சிக்கப்பட்டார் (லூக்கா 7:39).*

*தற்போதைய சந்தர்ப்பப் பொருளில் மரியாள் தனது ஊதாரித்தனமான வீண்செலவிற்காக விமர்சிக்கப்பட்டாள் (26:8, 9). லூக்கா சுவிசேஷத்தில் பாவம் நிறைந்த பெண்ணுக்கு, "அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" … "அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" என்று கூறப்பட்டது (லூக்கா 7:48-50). இங்கு இயேசு மரியாளைப் பாராட்டி அவளை விமர்சித்தவர்களைக் கடிந்து கொண்டார் (26:10-13).*

***வசனங்கள் 8, 9.*** *மரியாள் இயேசுவை அபிஷேகம் செய்தபோது,* ***சீஷர்கள்*** *அதைக் கண்டு* ***விசனமடைந்தனர்;*** *இது அவர்களைப் பொறுத்தமட்டில்* ***வீண்செலவாக*** *இருந்தது. "சிலர் தங்களுக்குள்ளே விசனமடைந்து: இந்தத் தைலத்தை இப்படி வீணாய்ச் செலவழிப்பானேன்?" என்று ஒருவருக்கொருவர் விசனத்துடன் கூறிக்கொண்டனர் (மாற்கு 14:4). அப்போஸ்தலர்களில் பலர் இந்த விமர்சனத்தில் ஈடுபட்டிருக்கலாம், ஆனால் யூதாஸ் தான் இதைத் தூண்டியவராக இருந்ததாகக் காணப்படுகிறது (யோவான் 12:4, 5). அவர் "இந்தக் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன" என்று கூறினார் (யோவான் 12:5).*[16] *இருப்பினும் அவர்*

*இதை, "தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்" (யோவான் 12:6).*

யூதாஸ், கர்த்தருக்கும் அவருடைய அப்போஸ்தலர்களின் குழுவினருக்கும் பொருளாளராக இருந்தார், மற்றும் அவர்களின் அற்பமான வருமானங்களில் இருந்து அவர் திருடிக்கொண்டிருந்தார். இது, யூதாஸ் பேராசையுள்ள மனிதராக இருந்தார் என்பதையும் தமது செல்வங்களைப் பெருக்கிக் கொள்ள எதையும் செய்வதை நிறுத்தமாட்டார் என்பதையும் நிரூபிக்கிறது. திருடும் ஒரு நபர் பொய் கூறவும், நண்பரைக் காட்டிக்கொடுத்தல் உட்பட மற்ற பாவங்களையும் செய்ய வாய்ப்புள்ளது.

***வசனம் 10.*** இந்த இடத்தில் அப்போஸ்தலர்களின் விமர்சனத்தை ***இயேசு அறிந்தார்*** (காண்க 12:15; 16:7, 8; 22:18). இந்தத் தகவலை அவர் இயற்கைக்கு மேலான வகையில் அறிந்திருக்கலாம் அல்லது அவர்களின் உரையாடலை அவர்கள் அறியாவண்ணம் கேட்டிருக்கலாம் (காண்க மாற்கு 14:4, 5).

இயேசு, மரியாளின் நடவடிக்கைகளைத் தற்காத்து, ***நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன் தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்*** என்று கூறி, தமது சீஷர்களைக் கடிந்துகொண்டார். "நல்ல" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*kalos*) கிரேக்க வார்த்தை "வெளியே அழகுமிக்க" என்று அர்த்தப்பட முடியும் (காண்க RSV; NIV; NCV; JNT), ஆனால் இங்கு அது "நல்ல" அல்லது "மாண்புமிக்க" என்ற ஒழுக்கரீதியான அர்த்தத்தையே கொண்டிருக்க வாய்ப்புள்ளது.

***வசனம் 11.*** இயேசு தமது உரையைக் கேட்டவர்களுக்கு, அவர்கள் உதவி செய்ய ***ஏழைகளை எப்போதும் கொண்டிருப்பார்கள்*** என்பதை நினைவுபடுத்தினார். அவர் தமது சிந்தையில் உபாகமம் 15:11ஐக் கொண்டிருக்கலாம்: "தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்." இருந்தபோதிலும், அவர்கள் மத்தியில் இயேசு இருக்கும் வேளை மட்டுப்படுத்தப் பட்டதாக இருந்தது. மரியாள் "(அவருக்குச் செய்த) அன்பின் செயலானது இப்போது, அவரது பிரிவிற்குப் பின்பு தொடர்ந்து செய்யப்பட வேண்டிய இரக்கத்தின் செயல்களுக்கு முன்னான இடத்தை எடுத்துக்கொள்கிறது (இவ்வசனம் மாற்கு 2:19, 20)."[17] ஏழைகள் மீது அப்போஸ்தலர்கள் கொண்டிருந்த அக்கறைக்காக அவர்களை இயேசு விமர்சனம் செய்யவில்லை. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் என்ற வகையில் அவர்கள் அவ்வாறு அக்கறை கொண்டிருக்க வேண்டும்.

***வசனம் 12.*** தொடர்ந்து இயேசு, ***இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது*** என்று கூறினார். இறந்தபின் அடக்கம் பண்ணுவற்கு, உடலை வாசனைத் திரவியங்களுடனும் நறுமணப் பொருட்களுடனும் ஒரு மெல்லிய துணியில் சுற்றுவது யூதர்களின் வழக்கமாக இருந்தது. இயேசு மரித்தபின், அவரது உடல் அரிமத்தியா ஊர் யோசேப்பு மற்றும் நிக்கொதேமு ஆகியோரால், மெல்லிய துணியில் வாசனைப் பொருட்களுடன் அவசரமாகச்

*சுற்றிக்கட்டப்பட்டது (யோவான் 19:40). ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் பெண்கள் அதிகமான வாசனைப் பொருட்களை எடுத்துக்கொண்டு - அந்த உடலை அடக்கம் பண்ண அதிகம் ஏற்புடையதாக்க - கல்லறைக்கு வந்தனர் (மாற்கு 16:1). இந்த வேளையில் மரியாள், இயேசுவின் மரணத்திற்கு முன்னர் தன்னால் செய்ய முடிந்ததைச் செய்திருந்தாள்.*

*இயேசு மரிக்கப்போகிறார் என்று மரியாள் நம்பினாளா? அவர் தமது மரணத்தைப் பற்றிப் பல சந்தர்ப்பங்களில் முன்னுரைத்திருந்தார், ஆனால் அதன் உண்மை நிலையை, அவரது சீஷர்கள் மெதுவாகவே ஏற்றுக்கொண்டனர். இந்த வேளையில் அவள் இவ்விஷயம் பற்றி அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அதிகமாக ஆவிக்குரிய உட்கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கலாம்.[18] அவளுடைய அன்பின் செயல்பாட்டை அவளது அறிவின்படியல்ல ஆனால் இயேசு தமது அறிவின்படியே விளக்கினார் என்ற இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது. அவள் "நற்செயல்" செய்தாள் என்று கூறியதன் மூலம் இயேசு அந்தப் பெண்ணைத் தற்காத்தார். இரு நற்செயல்களின் முக்கியத்துவத்தை ரபீக்கள் கண்டனர்: ஏழைகளுக்கு உதவி செய்தல் மற்றும் மரித்தோரை அடக்கத்திற்குத் தயார்படுத்துதல். அடக்கத்திற்குத் தயார்ப்படுத்துதல் என்பது "தர்மம் செய்தல் போன்று எல்லா வேளையிலும் அல்ல, ஆனால் தேவைப்படும் வேளையில் மாத்திரமே செய்யப்பட முடியும் என்பதாலும், அது நபர்த்துவமற்ற வகையில் பணத்தைத் கொடையாகக் கொடுத்தலை அல்ல, ஆனால் தனிப்பட்ட சேவையை உள்ளடக்கி இருந்ததாலும்" உயர்ந்த முன்னுரிமையைப் பெற்றது.[19]*

***வசனம் 13.*** *மரியாள் அந்தத் தைலத்தைப் பத்திரமாக வைத்திருந்து அதைக் தாம் நேசித்த ஒருவரின் மரணத்திற்குப் பிற்பாடு உடலை அபிஷேகம் செய்யப் பயன்படுத்தி இருக்கலாம். இருப்பினும் அவள் அவ்வாறு காத்திருந்தால், பொன்னான வாய்ப்பு ஒன்றை நழுவவிட்டிருப்பாள். இரக்கம் மிக்க இந்தத் செயலை அவள் நிகழ்த்தியதால்,* ***இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ*** *அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று இயேசு கூறினார்.*

## *#3: இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாஸ் சம்மதித்தல் (26:14-16)*

***[14]அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்:***

***[15]நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள்.***

***[16]அதுமுதல் அவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.***

***வசனம் 14.*** *இயேசுவை அபிஷேகம் செய்த (மரியாள் என்ற) பெண்ணின் அன்பான செயலைத் தொடர்ந்து,* ***பன்னிருவரில் ஒருவனாகிய*** *யூதாஸினால் இயேசு காட்டிக்கொடுக்கப்படுதல் வந்தது. இங்கு இதன் தோற்றமானது, மத்தேயு சுவிசேஷத்தில்* ***யூதாஸ்காரியோத்து*** *என்ற பெயர் இரண்டாம்*

முறையாக மாத்திரமே வருகிறது. 10:4ல் இந்தப் பெயர் முதலாவதாகக் குறிப்பிடப்படும் இடத்தில், இயேசு அப்போஸ்தலர்களுக்குக் கட்டளை கொடுத்து அனுப்பினார். அவ்வசனத்தில் இவர், "அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து" என்று அழைக்கப்படுகிறார் (காண்க 26:24, 25, 46, 48; 27:3). நினைவுகூரப்படுவதற்கு என்ன ஒரு பயங்கரமான வழி!

**பிரதான ஆசாரியர்களிடத்தில்** யூதாஸ் கூடிப்பேசியது, மரியாளின் பரிசிற்குப் பின்பு விரைவில் நடைபெற்றது. அவரது போராசையினால் (யோவான் 12:6), அவர் கோபமூண்டவரானார்; மற்றும் அவரது கோபம் இயேசுவின் புத்திகூறுதலைச் சகிக்கக் கூடாததாக இருந்தது (26:10-13). யோவான் 12:4ம் வசனம், யூதாஸ் மரியாளை விமர்சித்தபோது, அவரை (இயேசுவைக்) "காட்டிக்கொடுக்க" **ஏற்கனவே** மனதுள்ளவராக இருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.[20] யூதாஸ் காட்டிக்கொடுத்ததற்கான சாத்தியக்கூறுள்ள மற்ற நோக்கங்களில், இராஜ்யம் பற்றிய இயேசுவின் கருத்தில் அவரது (யூதாஸின்) ஏமாற்றம் (அது உலகப்பிரகாரமானதாக இருப்பதற்குப் பதில் ஆவிக்குரியதாக இருக்கிறது என்பதால் ஏற்பட்ட ஏமாற்றம்) மற்றும் ரோமாபுரிக்கு எதிராக இயேசுவின் கரத்தை வற்புறுத்த விருப்பம் ஆகியவை உள்ளடங்கியிருந்தன.

**வசனம் 15.** இந்தகாட்சி "ஒரு கொடுமையான வியாபார முன்மொழிதல்" என்று முத்திரையிடப் பட்டுள்ளது.[21] இயேசுவைக் **காட்டிக்கொடுக்கப்** பிரதான ஆசாரியர்கள் என்ன **கொடுப்பார்கள்** என்று கேட்க, அவர்களிடம் யூதாஸ் சென்றார் என்ற உண்மையில், யூதாஸின் பேராசை தெளிவாகிறது. யூதத்தலைவர்கள் இயேசுவைப் பிடித்து மரணத்திற்கு உள்ளாக்க வேண்டும் என்று விரும்பியதால் (26:3-5), அவரை அவர்களிடம் ஒப்புக்கொடுக்க யூதாஸ் தானே முன்வந்தபோது அவர்கள் எவ்வளவு "சந்தோஷம்" அடைந்திருப்பார்கள் என்பதை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும் (காண்க மத்தேயு 14:11; லூக்கா 22:5).

[யூதாஸின் வேண்டுகோளுக்கு] பதில் செயலாக இந்த மனிதர்கள் யூதாஸுக்கு **முப்பது வெள்ளிக்காசைக்** கொடுக்க உடன்பட்டார்கள். அவர்கள் யூதாஸக்கு வழங்க முன்வந்த தொகையானது, நியாயப்பிரமாணத்தின்படி, மிருகத்தினால் கொல்லப்பட்ட அடிமையின் உயிருக்கு ஈடாக வழங்கப்பட வேண்டியிருந்த தொகையாகும் (யாத்திராகமம் 21:32). இது சகரியா தீர்க்கதரிசியால் முன்னுரைக்கப்பட்ட தொகையாகவும் இருந்தது (சகரியா 11:12, 13). மேய்ப்பனைப் பற்றிய ஒப்புவமையில் அவருக்கு முப்பது வெள்ளிக்காசுகள் தரப்பட்டது, அதே வேளையில் மத்தேயு சுவிசேஷத்தில் (நல்ல மேய்ப்பராகிய) இயேசு முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட்டார்.[22] இவ்விரு காட்சிகளிலுமே, மேய்ப்பர் தமது மக்களால் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார். இயேசுவைக் காட்டிக்கொடுத்தலில் உள்ளடங்கிய பணத்தொகை பற்றி சகரியா குறிப்பிட்டதுமன்றி, அது குயவனின் நிலத்தை வாங்கப்பயன்படும் என்பதையும் அவர் முன்னுரைத்தார். இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தை, பிற்பாடு மத்தேயு பதிவுசெய்து, தீட்டான இந்தப் பணத்தைக் கொண்டு வாங்கப்பட்ட குயவனின் நிலம் அந்நியர்களை அடக்கம் பண்ணும் இடமானது என்றும் கூறினார் (27:6-10).

**நிறுத்துக்கொடுக்க** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*histēmi* என்பதில்

*இருந்து வந்த) கிரேக்க வார்த்தை சகரியா 11:12 லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இதைத் தீர்க்கதரிசி எழுதியபோது, உத்தரவாதமான மதிப்புடைய முத்திரையிடப்பட்ட நாணயங்கள் பொதுவான பயன்பாட்டில் இருந்ததில்லை, எனவே வெள்ளியை தராசில் நிறுத்துக் கொடுத்தல் அவசியமாக இருந்தது.*[23] *முதல் நூற்றாண்டில் நாணயங்கள் எண்ணி மாத்திரம் கொடுக்கப்பட்டன என்றாலும், ஒருவேளை மத்தேயு histēmi என்ற வார்த்தையை, சகரியாவின் தீர்க்கதரிசனத்தை எதிரொலிக்கும் வகையில் பயன்படுத்தியிருக்கலாம். "நிறுத்துக்கொடுக்க" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, பல ஆங்கில வேதாகமப்பதிப்புகள் "எண்ணி கொடுக்க"* (TEV; NIV; NKJV) *அல்லது "கொடுக்க"* (NRSV; NJB; CEV) *என்ற சொற்றொடரைக் கொண்டுள்ளன.*

***வசனம் 16.*** *இந்த வேளையில் இருந்து யூதாஸ், தனது பேரத்தைக் காத்துக்கொள்வதற்கும்,* **இயேசுவை** *அவருடைய எதிரிகளின் கையில் ஒப்புக்கொடுப்பதற்கும்* **நல்ல வாய்ப்பைத் தேடிக்கொண்டு இருந்தார்.** *யூதாஸ் மற்றும் பிரதான ஆசாரியர்களுக்கு இடையில் நடந்த சந்திப்பு, பாடுகளின் வாரத்தின் புதன்கிழமையில் நடந்திருக்கும் என்பது உறுதி. அதற்குப் பின் ஒன்றரை நாள் கழித்து அவரது வாய்ப்பு வந்தது.*

## ✧✧✧✧✧ *பாடங்கள்* ✧✧✧✧✧

## *"அவளின் நினைவாக" (26:6-13)*

*பெத்தானியாவில் இயேசு அபிஷேகம் செய்யப்பட்ட வரலாறு, தனிப்பட்ட ஒரு செயலானது இன்னொருவரின் வாழ்வில் மாபெரும் செயல்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்று நமக்குப் போதிக்கிறது. இயேசுவை அபிஷேகம் செய்த பெண் மத்தேயு சுவிசேஷத்தில் பெயரைக்கொண்டு குறிப்பிடப்படுவதில்லை, ஆனால் அவள் இலாசருவின் சகோதரியாகிய மரியாள் என்று யோவான் அடையாளப்படுத்துகிறார் (யோவான் 12:2, 3). அவளுடைய இரக்கம் நிறைந்த செயலைப் பற்றி ஐந்து உற்றுநோக்குதல்கள் ஏற்படுத்தப்பட முடியும்.*

*1. அவள் இயேசுவுக்கு விலையுயர்ந்த பரிசைக் கொடுத்தாள். அந்த வாசனைத்திரவியம், ஒரு ஆண்டுக்குத் தரப்படும் கூலிக்குச் சமமான 300 தினேரியம் விலைமதிப்புடையதாக இருந்தது (மாற்கு 14:5). மதிப்பு மிக்க இந்தப் பரிசு ஒரு பெரிய தியாகமாக இருந்தது.*

*2. அவள் எதையும் தனக்கென்று பின்வைக்கவில்லை. அவள் அந்த வெள்ளைக்கல் பரணியில் இருந்த எல்லாவற்றையும் ஊற்றுவதற்காக, அதன் கழுத்துப் பகுதியை உடைத்து விட்டாள் (மாற்கு 14:3) - "அது ஏறக்குறைய ஒரு இராத்தல் சுத்தமான நளதம் என்ற தைலத்தைக் கொண்டிருந்தது" (யோவான் 12:3;* NIV*).*

*3. அவள் அந்தப் பரிசை நேரடியாகக் கொடுத்தாள். யாரேனும் ஒருவர் மூலமாக இயேசுவுக்குப் பரிசைக் கொடுத்து அனுப்புவதற்குப் பதிலாக, மரியாள் தானே அந்தத் தைலத்தை அவர்மீது ஊற்றினாள் அது மிகவும் தனிப்பட்டதாக இருந்தது.*

*4. அவள் மற்றவர்களின் விமர்சனத்தைச் சகித்துக் கொண்டாள். அவளது*

செயல்களை இரக்கமான செயல் என்று கூறி ஆதரித்து இருந்திருக்க வேண்டிய சீஷர்கள், அதை "வீணானது" என்று குறிப்பிட்டனர். அவர்களின் கடினமான வார்த்தைகள் அவளை ஆழமாகப் புண்படுத்தி இருக்கும் என்பது உறுதி.

*5. அவள் இயேசுவினால் பாராட்டப்பட்டாள்.* அவளை விமர்சித்தவர்களை இயேசு வாயடைத்து, அவளது செயல்களை தமது அடக்கம் பண்ணுதலுக்கான ஆயத்தம் என்று இயேசு விளக்கப்படுத்தினார். மேலும் அவர், "இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்தது சொல்லப்படும்" என்று அறிவித்தார் (26:13).

நமது இரக்கம் நிறைந்த செயல்களுக்காக நாம் நினைவுகூரப்படுவோமா?

டேவிட் ஸ்டீவர்ட்

# யூதாஸ்காரியோத்
## (26:14-16, 20-25, 47-50)

யூதாஸ்காரியோத் என்ற பெயர் புகழ்ச்சியற்றதாக உள்ளது. உலகத்தில் மாபெரும் காட்டிக் கொடுத்தவர்களைப் பற்றிப் பேசப்படும்போதெல்லாம், இவரது பெயர் நினைவுகூரப்பட்டு பழித்துரைக்கப் படுகிறது. எவரொருவரும் தனது மகனை அந்தப் பெயர்கொண்டு அழைக்கமாட்டார், இருப்பினும் அந்தப் பெயர், "துதி" என்று அர்த்தப்படுகிறது, மற்றும் இது எபிரெய மொழியில் "யூதா" என்ற அதே பெயராக உள்ளது (ஆதியாகமம் 29:35). யூதாஸ் எவ்வாறு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுப்பவர் ஆனார்? அவர் பரிதாபமானவராகிய, அழிவின் பாதையில் இருந்து தமது எஜமானரைத் திருப்ப முயற்சி செய்த குழப்பமான உருவமானவரா? அவர் தமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருந்த சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டவராக, தேவனுடைய அருளிரக்கத்திற்கு செயலற்ற கருவியாக இருந்தாரா?

ஜீவ அப்பம் பற்றிய இயேசுவின் பிரசங்கத்திற்குப் பின்னர் (யோவான் 6:48-58), பேதுரு "ஆண்டவரே ... நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று கூறினார் (யோவான் 6:68). இயேசு, "பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்" என்று பதில் அளித்தார் (யோவான் 6:70). அவர் "சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து பன்னிருவரிலொருவனாயிருந்தும், தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனாயிருந்தபடியினால் அவனைக் குறித்து இப்படிச் சொன்னார்" என்று யோவான் விளக்கினார் (யோவான் 6:71). இயேசுவை "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" (யோவான் 6:69) என்ற பேதுருவின் உறுதிப்பாட்டை அவர், மற்ற எல்லா அப்போஸ்தலர்களுடனும் பகிர்ந்து கொண்டதாகக் காணப்படுகிறது என்பது உறுதி. இயேசுவே கிறிஸ்து என்று யூதாஸ் விசுவாசித்திருந்தால், அவர் தமது கர்த்தரை ஆக்கினைக்குள்ளாக்கியது எவ்வாறு?

யூதாஸைப் பற்றிப் பதில் அளிக்க இயலாத கேள்விகளை நாம் கொண்டிருக்கையில், வேத வசனங்களில், அவரது வாழ்வு பற்றிய பல உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

*முதலாவது, இயேசுவைக் காட்டிக்கொடுத்தல் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்தபோதிலும், தேவனுடைய மீட்பின் திட்டத்தில் யூதாஸ் ஒரு மனவிருப்பமற்ற பகடைக்காயாக இருக்கவில்லை என்பதை நாம் அறிகிறோம் (சங்கீதம் 41:9; 55:12-14; நடபடிகள் 1:25).*

*இரண்டாவது, யூதாஸ் இயேசுவினால் தெரிந்துகொள்ளப் பட்டிருக்கையில், யூதாஸ் பிசாசாக இருக்கவில்லை; ஆனால் அவர் பிற்பாடு பிசாசுக்கு மனவிருப்பத்துடன் வேலை செய்யும் ஒரு முகவராக ஆனார். அவர் சோதனைக்கு இடம் கொடுத்து, தனது வாழ்வில் சாத்தான் மேலாதிக்கம் செலுத்த அனுமதித்தார் (காண்க யோவான் 13:27).*

*மூன்றாவது, மற்ற அப்போஸ்தலர்களைப் போன்றே யூதாஸும், அற்புதங்களைச் செய்யும் வல்லமையைக் கர்த்தரிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டார் - மற்றும் அவர் அதைப் பயன்படுத்தி இருக்கவும் வாய்ப்புள்ளது (லூக்கா 9:1, 10). அவர் இயேசுவின் பலத்த செயல்களையும் கண்டிருந்தார், எனவே அவர் இயேசுவின் உண்மையான அடையாளத்தைப் பற்றி வஞ்சிக்கப்பட்டவராக இருக்கவில்லை. இயேசுவை அவரது விரோதி களிடத்தில் அவர் விற்றுப்போடுகையில், அவர் (இயேசு) யாராக இருந்தார் என்று அவர் (யூதாஸ்) அறிந்திருந்தார்.*

*நான்காவது, யூதாஸ் பேராசையின் பிரச்சனையைக் கொண்டிருந்தார். மற்ற எல்லாப் பாவங்களையும் போன்றே, இதுவும் அவரது இருதயத்தில் இருந்து தோன்றிற்று (15:19). அவர் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதைக் காட்டிலும், இந்த உலகத்தில் செல்வங்களைச் சேர்த்து வைத்தலில் அதிக அக்கறை உடையவராக இருந்தார். அவரது பேராசையே, மரியாள் மீது வார்த்தைகளினால் தாக்குதலைத் தொடுக்கும்படி அவரைத் தூண்டிற்று (யோவான் 12:4-6). அதற்குச் சற்றுப் பின்பு, அவர் கர்த்தரைக் காட்டிக்கொடுக்கப் புறப்பட்டார் (26:14, 15).*

*யூதாஸ் தமது காட்டிக்கொடுத்தலில் மனவிருப்பம் கொண்டவராக இருந்தார். பெருந்திரளான கூட்டத்தார் இயேசுவைக் கண்டறியும்படி அவர்களை அவர் கெத்செமெனே தோட்டத்திற்கு வழிநடத்திச் சென்றார் (26:47).*

## *யூதாஸ் தவறிச் சென்றது எங்கே?*
## *(26:14-16, 20-25, 47-50)*

*நாம் தவிர்க்க வேண்டிய பல தவறுகளை யூதாஸ் தமது வாழ்வில் செய்தார்:*

*1. பணத்தின்மீதான தமது மிதமிஞ்சிய ஆசையை அவர் வெற்றிகொள்ளவில்லை.*

*2. கிறிஸ்துவின் எச்சரிக்கைகளை அவர் கேள்விப்பட்டும் அவற்றைக் கவனிக்கவில்லை.*

*3. தமது பொன்னான வாய்ப்புக்களை அவர் ஆதாயமாக்கிக் கொள்ளவில்லை.*

*4. தம்மைச் சுற்றிலும் நடந்தவற்றைப் பற்றிய அளவீடுகளை அவர் பற்றிக்கொள்ளவில்லை.*

*5. ஏமாற்றங்களும் சந்தேகங்களும் தமது வாழ்வை மேற்கொள்ள அனுமதித்தார்.*

*6. தம்மையும் மற்றவர்களையும் விட்டுக்கொடுத்தார்.*

---

குறிப்புகள்

[1]*ஒரு சிலநாட்கள் முன்னதாக இயேசுவை (26:6-13) அபிஷேகம் செய்தல் நடைபெற்றது. 26ம் அதிகாரத்தின் மற்ற நிகழ்ச்சிகளுக்கு ஒருவேளை மத்தேயு அந்தப் பெண்ணின் பெருந்தன்மையான அர்ப்பணிப்பை, இயேசுவினால் தேர்ந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களில் ஒருவரான யூதாஸ், அவரைக் காட்டிக் கொடுத்தலுக்கு நேரெதிராக ஒப்பிடுவதற்காக அந்த எடுத்துரைப்பை இவ்விடத்தில் வைத்திருக்கலாம் (26:14-16).* [2]Donald A. Hagner, *Matthew 14—28,* Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 749. [3]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 150. [4]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 644. [5]Talmud *Yoma* 18a; *Yebamoth* 61a. [6]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 141. [7]Josephus *Antiquities* 18.2.1. [8]Ibid., 20.9.1. [9]Ibid., 18.2.2; 18.4.3. [10]Ibid., 18.2.2.

[11]Michael J. Wilkins, “Matthew,” in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 160. *வில்க்கின்ஸ் அவர்கள், தமது கலந்துரையாடலுடன் காய்பாவின் புதைக்கும் பெட்டியின் புகைப்படம் ஒன்றை உள்ளடக்கினார்.* [12]Douglas R. A. Hare, *Matthew,* Interpretation (Louisville: John Knox Press, 1993), 293; *காண்க* Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 238. [13]*அதே வீட்டில் முழுக்குடும்பமும் இருந்திருக்கக் கூடும். லூக்கா சுவிசேஷத்தில் மார்த்தாள், தனது வீட்டில் இயேசுவுக்கு விருந்தளித்ததாகச் சித்தரிக்கப்படுகிறாள் (லூக்கா 10:38, 40). இந்த வேளையில் யோவான் சுவிசேஷம், மார்த்தாள் சீமோனின் இல்லத்தில் இந்த உணவைப் பரிமாறியதாகச் சுட்டிக்காண்பிக்கிறது (யோவான் 12:2).* [14]Wilkins, 161. [15]Lewis, 142. [16]*ஒருவர் தமது பொருள்களை விற்று அந்தத் தொகையை ஏழைகளுக்குக் கொடுத்தல் என்பது செல்வந்தரான அதிகாரிக்கு இயேசுவின் அறிவுறுத்துதல்களை எதிரொலிக்கிறது (19:21).* [17]Joel B. Green and Holly E. Hearon, “Anointing,” in *Dictionary of Jesus and the Gospels,* ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 12. [18]*ஒருவேளை அவள் தனது சகோதரன் இலாசரு உயிர்ப்பிக்கப் பட்டதினால் உயர்ந்திருந்த மன இறுக்கத்தையும் உணர்ந்திருக்கலாம் (யோவான் 12:9-11).* [19]Hare, 294. [20]NASB *வேதாகமத்தில் இந்தத் கருத்து தரப்படுகிறது. இருப்பினும் மற்ற பதிப்புகள் இயல்பில் அதிகம் பொதுவானதாக உள்ளன. உதாரணமாக,* NIV [*மற்றும் தமிழ்*] *வேதாகமம், யூதாஸை “அவரைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனுமாகிய” என்று விவரிக்கிறது (யோவான் 12:4).*

[21]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 363. [22]Hare, 294. [23]Joyce G. Baldwin, *Haggai, Zechariah, Malachi: An Introduction and Commentary,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: InterVarsity Press, 1972), 184.